28th March 1959]

Sri V. SUBBIAH : டிபாசிட் பணம் திருப்பிக் கொடுக்கப்படாத தால், ரீபண்டு பண்ணப்படாததால், பல கிராமாந்திர ரோடுகளை ஜில்லா போர்டு கண்டிராக்டர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறதால், அவர்களுடைய பணத்தைத் திரும்பக் கொடுப்பது பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : அதற்காகத் தான் மார்ச் 25-ந் தேதிக்குள் அங்குள்ள நிலவரங்களைப்பற்றி தகவல் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள ஆபீசர்களைக் கேட்டிருக் கிறோம். அதன்படி எவ்வளவு உதவி அளிக்கவேண்டுமோ அவ்வளவு உதவி அளிக்கப்படும்.

Constitution of ex-zamin forests in the Reserved forests.

* 1034 *Q*.—Sri N. R. THIAGARAJAN (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government propose to constitute the ex-zamin forests into Reserved Forests; and

(*b*) if so, the steps taken or proposed to be taken to afforest the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes. Sir.

(*b*) At present, suitable areas of ex-zamin forests which are not burdened with rights, have been taken up for teak, softwood and fuel plantations under the different schemes relating to the Second Five-Year Plan.

Sri N. R. THIAGARAJAN : என்னுடைய தொகுதியில் 90 சத விகிதம் ஜமீன் பிரதேசங்களாக இருக்கின்றன. அங்கு பெரும் பாலும் காடுகள் என்று சொல்லப்படுபவை பெயரளவில் இருக்கின்றனவே தவிர, ஒரு மரம் கூட கிடையாது. ஆகவே, எக்ஸ்-ஜமீன் ஏரியாக்களை காட்டிலாகா வசம் ஒப்புவித்து, அங்கு காடு வளர்க்க தனியாக நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வார்களா ?

The Hon Sri M. BHAKTAVATSALAM : ஜமீன் பிராந்தி யங்களிலே இருக்கும் காடுகள், கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல்தான் இருக்கிறது. அவைகளில் எங்கெங்கு மரங்கள் வளர்க்க முடி யுமோ அங்கெல்லாம் மரங்கள் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. குறிப் பாகச் சொல்ல வேண்டுமானால், கண்டமநாய்க்கன் ஜமீன் பகுதியில் தேக்கு மரம் நன்றாக வளரும் என்று ஏற்பட்டிருக்கிறபடியால், ஐயாயிரம் ஏக்கருக்கு மேல் தேக்கு சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இப்பொழுது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படும்.

Bone Digester

*1035*Q*.—**Sri A. VEDARATHNAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) வேதாரண்யம் பிர்க்காவில் மருதூர் கிராமத்தில் போன் டைஜஸ்டர் பிளேயிங் சென்டர் கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்களால் திறப்பு விழா நடைபெற்றதா ?

(ஆ) எப்போது ?